**DP/GIT/2019/01**

எனது எண்: 6/32/GIT/2019
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2022 ஒக்ரோபர் மாதம் 04 திகதி

சகல பாடசாலை அதிபர்களுக்கும்

## பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை – 2019/2020/2021/2022(2023)

மேற்படி வருடங்களுக்குரிய பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் உரிய பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் இத்துடன் அனுப்பி வைத்துள்ளேன். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2022 ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து நொவம்பர் மாதம் 04 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் மீண்டும் நீடிக்கப்படமாட்டாது.

2. இப் பரீட்சை கல்வி அமைச்சுச் செயலாளரின் ED/01/12/01/03/13 இலக்கமும் 2004.05.04 திகதியும் கொண்ட சுற்றறிக்கைக்கும், ED/03/38/1/27/01(SUB) இலக்கமும் 2002.03.07 ஆம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்திற்கும் அமைவாக நடாத்தப்படும்.

3. **முறைமைக்குள் (System) நுழைதல்**

(அ) விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- உத்தியோகபூர்வ (https://donets.lk) எனும் வலைத்தளத்தில் நுழைந்து "எமது சேவை" என்பதின் கீழுள்ள "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" ஐ Click செய்த பின்னர் GIT – 2019, 2020, 2021, 2022(2023). Student Registration (School) Click செய்வதன் மூலமோ அல்லது
- பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (mobile application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து "நிகழ்நிலை விண்ணப்பங்கள் (பாடசாலைப் பரீட்சைகள்)" ஐ Click செய்த பின்னர் GIT – 2019, 2020, 2021, 2022(2023). Student Registration (School) Click செய்வதன் மூலமோ அல்லது
- https://onlineexams.gov.lk/eic ஐ Click செய்து நுழைக.

(ஆ) கிடைக்கப்பெறும் window இல் School Account Login இல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள School Code, Password ஐ உள்ளடக்கி முறைமைக்குள் நுழைக. (உங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்ட School Code, Password தொலைத்திருப்பின் உரிய வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அவற்றைப் பெற்றுக் கொள்க.)

4. இவ்வருடங்கள் நான்கிற்கும் நிகழ்நிலை முறைமையில் (online) ஒரு தடவை மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அந்தந்த வருடங்களுக்காக தனித்தனியாக விண்ணப்பங்களை விண்ணப்பிப்பதற்கு கணினி தரவு முறைமையில் ஒவ்வொரு வருடங்களுக்கும் தனித்தனியாக தயாரிக்கப்பட்டுள்ளது. வருடங்களுக்கமைய மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் வசதிக்காக பின்வரும் விடங்களில் உங்கள் கவனத்தை செலுத்தவும்.

★ 2019 ஆம் ஆண்டு – 2020 ஒக்ரோபர் 12 தொடக்கம் நொவம்பர் 03 ஆம் திகதி வரை க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள்
★ 2020 ஆம் ஆண்டு – 2022 பெப்ரவரி 07 தொடக்கம் மார்ச் 05 ஆம் திகதி வரை க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள்
★ 2021 ஆம் ஆண்டு – இவ்வருடம் (2022) க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள்
★ 2022 ஆம் ஆண்டு – 2023 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள்

- எனது இலக்கமும் 2022.07.30 ஆம் திகதியுமுடைய கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கமைய 2019 , 2020 ஆண்டுகளுக்காக உங்களால் வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் விவரங்களை ஒவ்வொரு ஆண்டுகளுக்கும் அமைவாக தனித்தனியாக சரியாக தரவுகளை உள்ளடக்கவும்.
- 2019 , 2020 ஆண்டுகளுக்குரிய மாணவர்களை உள்ளடக்கும் போது அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதை உறுதிப்படுத்திக் கொண்டு அவர்களின் தரவுகளை மட்டும் உள்ளடக்கப்படல் வேண்டும். (பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களின் தரவுகளை உள்ளடக்க வேண்டாம்.)

5. (அ) விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் நீங்கள் கட்டாயமாக வாசிக்க வேண்டிய கடிதம் (இணைப்பு 01)

(ஆ) விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களுக்காக நீங்கள் கட்டாயமாக படிக்க வேண்டிய கடிதம் (இணைப்பு 02)

6. விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது பிழையின்றி குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட நகர எண்ணையோ பாட எண்ணையோ எக்காரணத்திற்காகவேனும் பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனால் முதற் சந்தர்ப்பத்திலேயே இவற்றைப் பிழையின்றிப் பூரணப்படுத்துதல் அதிபரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

| |
|---|
| எக்காரணத்திற்காகவேனும் பரீட்சை நிலையத்தையோ, விண்ணப்பித்த பாடங்களையோ அல்லது விண்ணப்பித்த மொழிமூலத்தையோ பின்னர் மாற்றம் செய்ய முடியாது. எனவே தங்களது விண்ணப்பப்படிவத்தை மிகச் சரியாகப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் பொறுப்பேற்கும் கடைசி தினத்தில் விண்ணப்பப்படிவத்தின் மென்பிரதியில் குறிப்பிடப்பட்ட விவரங்கள் சரியானவையா என்பதை கவனத்திற் கொள்ளவும். |

7. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிமூலங்களிலும் இடம்பெறும்.

8. நிகழ்நிலை முறைமையில் பூரணப்படுத்தி அச்சுப் பிரதியெடுத்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்களும் சரியானவையா என உறுதிசெய்து மாணவரிடம் கையொப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும். அதிபரும் கையொப்பமிட்டு பாதுகாப்பாக பாடசாலையில் வைத்துக் கொள்வதுடன் நிகழ்நிலை முறைமையில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் பிரதியிலுள்ள சகல தகவல்களும் சரியானவையென பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

9. உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு / கேட்டற் குறைபாடு மற்றும் வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதாயின் அவர்களுக்காக Special Education Needs Students' Additional Data இணைப்பில் (Link) வழங்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்களுக்காக பொருத்தமான வசதிகளுடன் இரத்மலானை, தங்காலை (பொலம்மாறுவ) இடங்களில் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படுமாகையால் அந்நிலையத்தில் மாணவர்களுக்கு தோற்றுவதற்கு இடமளிக்க முடியும்.

10. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :

இப்பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் தத்தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்தின்போதும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரமே சமர்ப்பிக்கலாம். வேறு எந்த ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகையினால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது பாடசாலை அதிபரின் பொறுப்பாகும்.

I. இப் பரீட்சையின் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துதல் தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் மேலதிகமாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் - 011-2784208 / 011-2784537/ 011-2786616
தொலைநகல் இலக்கம் - 011-2784422

II. தொழில்நுட்ப விசாரணைகள் (நிகழ்நிலை அலகு) 0113671568, 0113661122
மின்னஞ்சல் முகவரி : doeonlineexams@gmail.com

இது தொடர்பாக நீங்கள் வழங்கும் ஒத்துழைப்புக்கு மிக உயர்ந்த மதிப்பளிக்கின்றேன்.

எல்.எம்.டீ. தர்மசேன
பரீட்சை ஆணையாளர் நாயகம்

பிரதிகள் : 01. சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் - த.அ.கொ
02. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் - த.அ.கொ

D:\New Volume\A\2022\GIT\Principal\DP-GIT-2019-1.doc

**இணைப்பு 01**

விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னதாக கட்டாயமாக வாசித்திருத்தல் வேண்டும்.

எனது எண் : 6/32/GIT/2020

பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்ல.
2022.10.24

சகல அதிபர்களுக்கும்,

## பெறுபேற்று அட்டவணையில் பெயர் திருத்தம்

பரீட்சைக்காக விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும்போது விண்ணப்பதாரிகளின் பிறப்புச் சான்றிதழில் குறிப்பிட்டுள்ள பெயரை ஆங்கிலத்தில் பூரணப்படுத்துவதில் ஏற்படுகின்ற தவறுகள் காரணமாக அப்பெறுபேற்று அட்டவணைகளில் பெயர் திருத்தங்களுக்காக தினந்தோறும் பெருமளவு எண்ணிக்கையிலானோர் பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகை தருகின்றனர்.

வெளிநாடுகளுக்கு கல்வி தொடர்பான விடயங்களுக்கும், தொழில் வாய்ப்புக்களுக்கும் போகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளதால் அதற்காக அவர்களுக்கு சரியான பெயருடன் பெறுபேற்று அட்டவணையின் பிரதியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். பெயரில் ஓரெழுத்திலாவது தவறு இருந்தால் அப்பெறுபேற்றுச் சான்றிதழ் வெளிநாட்டில் நிராகரிக்கப்படுவதால் விண்ணப்பதாரிகள் மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

பாடசாலை விண்ணப்பப்படிவங்களில் அநேகமாகக் காணப்படும் சில பெயர் திருத்தங்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ளன.

- முதற் பெயரில் ஒரு பகுதியை குறைவாக எழுதுதல்.
  MURALITHARAN - MURALI
- முதற் பகுதியில் ஒரு பகுதியை மேலதிகமாகச் சேர்த்தல்
  SELVAM - SELVANAYAGAM
- முதற் பெயர் ஒன்றாக இருக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் பிரித்து எழுதுதல்.
  NIZAMDEEN – NIZAM DEEN
- பிரிந்து இருக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் ஒன்றாக எழுதுக.
  ABDUL HAMEED - ABDULHAMEED
- தேவையற்ற எழுத்துக்களைச் சேர்த்தல்
  ANTONY - ANTONIEE
- தேவையான எழுத்துக்களை எழுதவிடாமல் விட்டுவிடுதல்
  YOGARAJAN - YOGARAJ
- சமனான உச்சரிப்பில் குறித்த எழுத்துக்களைப் பயன்படுத்தாமை.

  உ-ம் 1. W/V TT/TH

  2. IBRAHEEM - IBRAHIM

  3. SURIYA - SOORIYA

- பெயர் மாற்றப்படுதல்

  உ-ம் AHAMED MOHIDEEN - MOHIDEEN AHAMED

தமது பெயரை ஆங்கிலமொழியில் சரியாக எழுதும் விதம் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் கவனத்தைச் செலுத்துவது மிக முக்கியமானது.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தி பாடசாலையில் இருக்கும் ஆங்கிலமொழி கற்பிக்கும் ஆசிரியரின் உதவியை பெற்று விண்ணப்பப்படிவத்தை சரியாக பூரணப்படுத்தி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எல்.எம்.டீ. தர்மசேன
பரீட்சை ஆணையாளர் நாயகம்

D:\New Volume\A\2022\GIT\Principal\Name Change.docx